| நம்மையும் நாட்டுமக்களையும் காப்போம் | தொற்றிலிருந்துதமிழகத்தைமீட்போம் |
| --- | --- |

செ.வெ.எண்:29 நாள்:22.06.2021

***மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள 301 அர்ச்சகர்கள், பூசாரிகள் மற்றும் பட்டாச்சாரியார்களுக்கு ரூ.12.04 இலட்சம் மதிப்பில் கொரோனா நிவாரண உதவித்தொகை மற்றும் 16 வகையான மளிகைப்பொருட்கள் வழங்கப்பட உள்ளது.***

***மாவட்டஆட்சித்தலைவர்***
***டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப.,அவர்கள் தகவல்.***

---

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (22.06.2021) மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் இந்து சமய அறநிலையத்துறை சார்பாக அர்ச்சகர்கள், பூசாரிகள், பட்டாச்சாரியார்கள் மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் ஆகியோருக்கு கொரோனா நிவாரண உதவித்தொகை ரூ.4,000 மற்றும் 16 வகையான மளிகை பொருட்கள் அடங்கிய தொகுப்பு வழங்கினார்.

**மாவட்ட ஆட்சித்தலைவர்**
**டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் பேசியதாவது:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொரோனா நோய்த்தொற்று பரவல் காரணமாக ஊரடங்கு காலத்தில் நிலவிவரும் அசாதாரண சூழ்நிலையில் திருக்கோயில்களில் பக்தர்கள் தரிசனத்திற்கு அனுமதிக்கப்படாததால் திருக்கோயில்களில் நிலையான மாதச் சம்பளமின்றி பணியாற்றி வரும் அர்ச்சகர்கள், பூசாரிகள் மற்றும் பட்டாச்சாரியர்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட நிலையில் அவர்களின் வாழ்வாதாரத்திற்காக இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள திருக்கோயில்களில் நிலையான மாதச் சம்பளமின்றி பணியாற்றி வரும் அர்ச்சகர்கள், பூசாரிகள் மற்றும் பட்டாச்சாரியார்கள் ஆகியோர்களுக்கு கொரோனா கால நிவாரண உதவித்தொகை ரூ.4,000, 10 கிலோ அரிசி மற்றும் 15 வகையான மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு வழங்கப்படும் என அறிவித்திருந்தார்கள்.

அதனைத்தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 03.06.2021 அன்று தலைமைச் செயலகத்தில் அர்ச்சகர்கள், பூசாரிகள், பட்டாச்சாரியார்கள் மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் ஆகியோர்களுக்கு கொரோனா கால நிவாரண உதவித்தொகை ரூ.4,000, 10 கிலோ அரிசி மற்றும் 15 வகையான மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பினை பயனாளிகளுக்கு வழங்கி தொடங்கி வைத்தார்.

அதன்படி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒருகால பூஜை திட்டத்தின் கீழ் கிருஷ்ணகிரி வட்டத்திற்குட்பட்ட கிருஷ்ணகிரி மற்றும் காவேரிப்பட்டிணம் பகுதிகளில் 58 நபர்களும், பர்கூர் வட்டத்தில் 35 நபர்களும், போச்சம்பள்ளி பகுதியில் 16 நபர்களும், ஊத்தங்கரை பகுதியில் 41 நபர்களும், சூளகிரி பகுதியில் 36 நபர்களும், ஓசூர் பகுதியில் 45 நபர்களும், அஞ்செட்டி பகுதியில் 30 நபர்களும், தேன்கனிக்கோட்டை பகுதியில் 40 நபர்கள் என மொத்தம் 301 நபர்களுக்கு கொரோனா கால நிவாரண உதவித்தொகை ரூ.4,000, மற்றும் 16 வகையான மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு வழங்கப்படும்

16 வகையான மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்புகளான 10 கிலோ அரிசி, எண்ணெய் 500 கிராம், சர்க்கரை 500 கிராம், ஆட்டா 500 கிராம், டீ தூள் 200 கிராம், துவரம் பருப்பு 500 கிராம், உளுத்தம் பருப்பு 500 கிராம், கடலை பருப்பு 500 கிராம், மிளகாய் தூள் 100 கிராம், புளி 200 கிராம், கடுகு 100 கிராம், வெந்தயம் 100 கிராம், மிளகு 100 கிராம், சீரகம் 100 கிராம், மஞ்சள் தூள் 100 கிராம் மற்றும் அப்பளம் 1 எண்ணம் ஆகியவை வழங்கப்படவுள்ளது.

மேலும், இந்து சமய அறநிலையத்துறை சார்பில், கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள, ஓசூர் மற்றும் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைகளுக்கு நாளொன்றுக்கு 1,200 உணவு பொட்டலங்கள் வீதம் 36 (11.05.2021 முதல் 15.06.2021) நாட்களுக்கு மொத்தம் 43,200 உணவு பொட்டலங்கள், தலா ரூ.25 வீதம் மொத்தம் ரூ.10.80 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது.

எனவே, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தளர்வுகள் நீக்கப்பட்டு திருக்கோவில்களில் பணியாற்றும் அர்ச்சகர்கள், பூசாரிகள், பட்டாச்சாரியார்கள் மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் அனைவரும் திருக்கோயில்களுக்கு சுவாமி தரிசனம் மேற்கொள்ள வரும் பக்தர்களிடம் முககவசம் அணிந்து, சமூக இடைவெளியை கடைபிடித்து தங்களையும், பக்தர்களையும் பாதுகாக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப.,அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் திரு.டி.கஜேந்திரன் (திருவண்ணாமலை மண்டலம்), உதவி ஆணையர் திரு.ஏ.ஆர்.பிரகாஷ் (கிருஷ்ணகிரி), மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.பி.முருகன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**

| | |
|---|---|
| முககவசம் அணிவீர் | தனி மனித இடைவெளி கடைப்பிடிப்போம் |